(6 pages) **Reg. No. :** ....................................

**Code No. : 12101** **Sub. Code : R 3 TA 41/ B 3 TA 41**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2013.

Fourth Semester

Part III — Tamil – Main

தாள் 6 — அற இலக்கியம்

(For those who joined in July 2008 to 2011)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

சரியான விடையை தேர்வு செய்க.

1. வள்ளுவர் இனிய சொல்லை எதனுடன் ஒப்பிடுகிறார்?

   (அ) அமிழ்தம் (ஆ) கனி

   (இ) ஆற்றுநீர் (ஈ) பொருள்

2. தீயைக் காட்டிலும் கொடியது எது?

   (அ) பொறாமை (ஆ) கடுஞ்சொல்

   (இ) பொய் (ஈ) ஒழுக்கமின்மை

3. கூற்றுவன் வருமுன் செய்யத்தக்கவை எவை?

   (அ) கல்வி கற்றல் (ஆ) அறம் செய்தல்

   (இ) பொய் கூறாதிருத்தல் (ஈ) விருந்தோம்பல்

4. பகைமைக்கு இடமாவது எது?

   (அ) கூடா நட்பு

   (ஆ) வறுமை

   (இ) கல்வியறிவு இல்லாமை

   (ஈ) தகுதியறியாதவனை இரந்து செல்வது

5. கல்வியால் நிறைந்து அடங்கியவர் நடுவே யார் செல்வது துன்பம் தரும்

   (அ) கல்லாதவன் (ஆ) பொய் பேசுபவன்

   (இ) அறிவில்லாதவன் (ஈ) பழிகூறுபவன்

6. அளவிற்கு மேல் உண்கின்றவர்களுக்கு ஏற்படும் தீங்கு யாது?

   (அ) நோய் மிகுதியாகும் (ஆ) பணம் விரயமாகும்

   (இ) பகை உருவாகும் (ஈ) நட்பு நீங்கும்

7. பொய்யாகத்தற்பெருமை பேசுவதைக் கேட்கும் அறிவுடையோர் செயல் என்ன?

   (அ) கேலி செய்வர் (ஆ) நகைப்பர்

   (இ) கடிந்து பேசுவர் (ஈ) துன்புறுத்துவர்

8. தேவர்க்கும் உயர்ந்தவர் யார்?

(அ) புலால் உண்ணாதவன்

(ஆ) பொய் கூறாதவன்

(இ) அறிவுடையோன்

(ஈ) பிறரைத் துன்புறுத்தாதவன்

9. கட்டுரைக்க வேண்டாம் என்று எதனைச் சொல்வார்?

(அ) காணாத வார்த்தை (ஆ) மண்ஓரம்

(இ) பேரான காரியம் (ஈ) பொய்பேசுவது

10. நெல்லுக்கு இறைத்த நீர் எதனைச் சேரும்?

(அ) பள்ளம் நோக்கிச் செல்லும்

(ஆ) புல்லுக்கும் சென்று சேரும்

(இ) கடலைச் சேரும்

(ஈ) மலைப்பயிருக்கும் செல்லும்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) நன்மக்கட்பேறு தரும் பயன்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) இனிய சொற்களைப் பேசுவதால் விளையும் பயன்களை எழுதுக.



12. (அ) புல்லறிபாளரின் செல்வம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நன்மக்கள் பிறக்கும் குடியினைக் குறித்து நான்மணிக்கடிகை கூறுவது யாது?

13. (அ) வீரமிலாளரின் கடுமொழியோடு இன்னாதனவாக இன்னாநாற்பது எவற்றைக் குறிப்பிடுகிறது?

(அல்லது)

(ஆ) மானிடவர்க்கெல்லாம் இனிது எனக் கூறப்படுவது யாவை?

14. (அ) 'அழகு' என்று காரியாசான் எவற்றை முன்வைக்கிறார்?

(அல்லது)

(ஆ) ஐம்பொறிகள் அடக்கமாவது யாவை?

15. (அ) கூலி தரும் பாங்கு பற்றிய உலகநீதி யாவை?

(அல்லது)

(ஆ) 'உண்ணீரும் ஆகிவிடும்' என்று மூதுரை கூறுவன யாவை?

பகுதி இ — ($5 \times 8 = 40$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

16. (அ) மனையாளோடு கூடிவாழ்தலின் சிறப்புக்களை வள்ளுவர் வழிநின்று ஆய்க.

(அல்லது)

(ஆ) அடக்கமுடைமையின் பயன்களை விவரி.

17. (அ) நான்மணிக்கடிகை கூறும் வாழ்க்கை நெறி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கடிகை கூறும் அறக்கருத்துகளைத் தொகுத்துரைக்க.

18. (அ) இன்னா நாற்பது காட்டும் மனிதநேயம் பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) முதுமொழிக் காஞ்சியின் 'எளியபத்து' கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

19. (அ) சிறுபஞ்சமூலம் விளக்கும் அறச்சிந்தனைகளை விவரி.

(அல்லது)

(ஆ) ஏலாதி காட்டும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.



20. (அ) ஔவையாரின் 'உலகநீதி' குறித்து நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) உவமை வழியாக நல்வழி கூறும் சிந்தனைகள் யாவை?

———————